தினப்புயல்
PIN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

## மருத்துவ துறைக்கான நோபல் பரிசு அறிவிப்பு




மருத்துவ துறைக்கான நோபல் பரிசு இன்று (03) அறிவிக்கப்பட்டது. இதில், அமெரிக்காவை சேர்ந்த கட்டாலின் கரிக்கோ, ட்ரூ வைஸ்மேன் ஆகிய இரு விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய 6 துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு உலகின் மிக உயரிய விருதாக கருதப்படும் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

அந்த வகையில் 2023ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் ஸ்வீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமில் இன்று முதல் அறிவிக்கப்படுகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நோர்வேயில் அறிவிக்கப்படும்.

முதல் நாளான இன்று மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. நோபல் குழுவின் தலைவர் நோபல் பரிசு பெறுபவரின் பெயரை அறிவித்தார்.

2023ம் ஆண்டிற்கான மருத்துவ நோபல் பரிசானது அமெரிக்காவை சேர்ந்த விஞ்ஞானிகள் கட்டாலின் கரிக்கோ, ட்ரூ வைஸ்மேன் ஆகிய இருவருக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராக பயனுள்ள எம்.ஆர்.என்.ஏ (mRNA) தடுப்பூசிகளை உருவாக்கியதற்காக இவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் 17 வருட பதக்க கனவு பறிபோனது

### வெள்ளிப் பதக்கம் பறிபோனது

17 வருடங்களின் பின்னர் ஆசிய விளையாட்டுப் போட்டியின் தடகளப் போட்டியில் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இலங்கை இழந்துள்ளது. 400x4 மீற்றர் கலப்பு தொடர் ஓட்டப் போட்டியில் இணைந்துகொண்ட இலங்கை அணி இரண்டாவது இடத்தைப் பெற்ற போதிலும், அது சட்டவிரோத வெற்றி என போட்டி அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

போட்டியில் இணைந்த இலங்கை அணி வீரர் ஒருவர் மற்றொருவரின் பாதையைத் தொட்டதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த தீர்மானம் தொடர்பாக இலங்கை மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 17 வருடங்களின் பின்னர் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கை




ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை வெள்ளிப் பதக்கம் ஒன்றை வென்றுள்ளது.

400x4 மீற்றர் கலப்புத் தொடர் ஓட்டப் போட்டியில் இந்த பதக்கம் இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இதில் இந்தியா வெண்கலப் பதக்கத்தையும், பஹ்ரைன் தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளது. 17 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தடகளப் போட்டியில் இலங்கை வென்ற முதல் பதக்கம் இதுவென்பது விசேடம்சமாகும்.

## முஸ்லிம்களின் பிரச்சினைகளும் ஜெனீவாவின் கவனத்திற்கு ஆதாரங்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும்

- ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான்



கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள புல்மோட்டை அரிசிமலை பிரதேசத்தில் அமைந்துள்ள காணி விவகாரம் தொடர்பில் பௌத்த தேரர்களுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிவரும் முரண்பாட்டை காணி அமைச்சர் தலையிட்டு விரைவில் சட்ட ரீதியாக தீர்த்து வைக்க வேண்டிய தருணம் வந்துள்ளது. ஏனெனில் காணி விவகாரம் தொடர்பில் பௌத்த தேரர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறும் வாய்ப்புகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் காணொளிகளில் தெரிகிறது. இதனால் இனமோதல்கள் உருவாகும் வாய்ப்புள்ளது. இந்த நிலை நாட்டுக்கு ஆபத்தானதாகும் என ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடு முழுவதும் உள்ள இவ்வாறான இன முரண்பாட்டை தோற்றுவிக்கக்கூடிய காணிகள் தொடர்பில் அரசாங்கம் முறையாக அவசரமாக தலையிட வேண்டும். இல்லையேல் பேராசை அரசியல் நலன்களுக்காக இரு தரப்பு கடும்போக்கு சிந்தனையாளர்கள் பிரச்சினைகளுக்கு வேறு உருவம் கொடுத்து. திசைதிருப்பி குழுப் பிரச்சினைகளாக மாற்றி நாட்டை சீரழித்து விடுவார்கள். இவர்களை பற்றி அலட்டிக்கொள்ளாமல் இவ்வாறான காணிப் பிரச்சினைகளை விட்டால் அது நாளடைவில் விரிவடையும் சாத்தியம் உள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகம் நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்காக பாடுபட்டதன் காரணமாக யுத்தத்தின் போது பெருமளவான காணிகளை யுத்தகாலத்தில் இழந்துள்ளனர். முஸ்லிம் சமூகத்தின் சமய மற்றும் அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் உடனடியாக தலையிட்டு யுத்தகாலத்தில் இழந்த முஸ்லிம்களின் காணிகளை முறையான நடவடிக்கைகளை எடுத்து சட்ட ரீதியாக மீட்டுக்கொடுக்க முன்வரவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளை முன்வைத்து அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அரசியல் செய்யாது நிரந்தர தீர்வை காண நாட்டின் ஆட்சியாளர்களை அணுகி தேசிய அரசியல் நீரோட்டத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும். மட்டுமன்றி அரசியல் சக்திகளை மட்டும் நம்பிக்கொண்டிராமல் மனிதாபிமானமுள்ள சட்ட வல்லுநர்கள், முஸ்லிம் சட்டத்தரணிகள், நீதித்துறை நடவடிக்கை மூலம் தீர்வு காண முன்வர வேண்டும். இவர்களுக்கு பக்கபலமாக முஸ்லிம் சிவில் அமைப்புக்கள், வர்த்தக பிரமுகர்கள் இருக்க வேண்டும். அதேபோல், போருக்கு முன்னும் பின்னும் நான்கு தசாப்தங்களாக முஸ்லிம் சமூகம் அனுபவித்த துன்பங்களை ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஆதாரங்களுடன் அறிக்கைகளை கொண்டு தெரிவித்து முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது மனிதாபிமான மனிதநேயத்தின் எல்லையற்ற பொறுப்பாகும் என்று தெரிவித்துள்ளார்.

## முச்சக்கரவண்டி கட்டணம் தற்போதைக்கு மாற்றமில்லை

எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், முச்சக்கர வண்டி கட்டணங்களை தற்போதைக்கு மாற்றியமைப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கத்தின் தலைவர் லலித தர்மசேகர ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாதந்தோறும் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுகின்ற நிலையில் முச்சக்கர வண்டி கட்டணத்தையும் அவ்வாறு மாற்றியமைக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார். சிபெட்கோ எரிபொருள் விலை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றர் 4 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 365 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. ஒக்டேன் 95 ஒரு லீற்றர் 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 420 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, லங்கா ஒட்டோ டீசல் லீற்றர் 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, அதன் புதிய விலை 351 ரூபாவாகும். லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 62 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, அதன் புதிய விலை 421 ரூபாவாகும். மண்ணெண்ணெய் 11 ரூபாவால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இம்மாதம் 07ஆம் திகதி முதல் புதிய கட்டமைப்பு அறிமுகம்



அனைத்து வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் புதிய கட்டமைப்பு (eRL 2.0) அறிமுகப்படுத்தல், இம்மாதம் 07ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார். மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இந்த வேலைத்திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், இந்தப் பொறிமுறையின் ஊடாக வீட்டிலிருந்தவாறே மக்களுக்கு வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் கிடைக்கும் என்றும் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், "இந்நாட்டில் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்தவும் முறைகேடுகளைத் தடுக்கவும் அரச சேவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். எனவே, இது தொடர்பில் அவதானம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையின்போது அனைத்து அரச நிறுவனங்களும் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், மாநகர சபைகள், மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட ஒன்பது வகையான அரச நிறுவனங்களைத் தெரிவுசெய்து, அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கும் வகையில் ஒன்பது முன்னோடி வேலைத் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும், எதிர்வரும் 07 ஆம் திகதி முதல் ஒன்லைன் முறையில் (eRL 2.0) வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் பெறும் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சங்கமும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய 08 மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்முறைமையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தி அடுத்த மாதம் மார்ச் மாதத்திற்குள் முழுமையாக ஒன்லைனில் கட்டணங்களை செலுத்தத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டுக்குள் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் நாடு முழுவதும் அரச சேவையை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வேலைத்திட்டத்தை அடைவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் Digi - Econ 2023-2030" வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு இணையாக தொழில்நுட்பக் கண்காட்சிகள், மாநாடுகள், டிஜிடல் துறையில் திறமைகளை வெளிப்படுத்திய இளைஞர், யுவதிகளை பாராட்டும் நிகழ்வுகள் போன்றன நடத்தப்படவுள்ளன.

நாட்டில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கான டிஜிட்டல் முதலீட்டு மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில் 100 முதலீட்டாளர்கள் பங்கேற்க உள்ளனர். இது, நாட்டின் முதலீடுகளை வலுப்படுத்த உதவும். இந்த நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவதே இந்த டிஜி இகொன் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் குறுகிய காலத்தில் அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என்றும், இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது." என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## அதிகரிக்கும் வெப்பத்தால் நூற்றுக்கணக்கான டொல்பின்கள் பலி

பிரேசில் நாட்டின் வடமேற்கில் தொடங்கி கொலம்பியா, பெரு உட்பட பல தென் அமெரிக்க நாடுகள் வரை பரவியுள்ளது அமேசான் மழைக்காடு. வடக்கு பிரேசிலில் அமேசோனாஸ் (Amazonas) மாநிலத்தின் தலைநகரமான மனோஸ் (Manaus) நகருக்கருகே உள்ளது டெஃப் (Tefe) பிராந்தியம். இப்பகுதியிலும் அமேசான் காடுகள் பரவியுள்ளது. இப்பகுதி முழுவதிலும் சமீப காலமாக பெரும் வறட்சி ஏற்பட்டுள்ளது. நீர் நிலைகளில் வெப்பம் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ஒரு சில இடங்களில் வெப்பம் 102 டிகிரி ஃபேரன்ஹீட் அளவை தொட்டு விட்டது. இதன் காரணமாக இங்குள்ள டெஃப் ஏரியில் நூற்றுக்கணக்கான டொல்பின்கள் உயிரிழந்து மிதக்கின்றன.

இத்தகைய சம்பவம் இதற்கு முன்பு நடைபெறாதது. டொல்பின் மீன்கள் இறந்ததற்கும் அதிகளவு வெப்பத்திற்கும் உறுதியான தொடர்புள்ளது. ஆனால், வெப்பநிலை அதிகரிப்பதற்கான காரணத்தை இதுவரை கண்டறிய முடியவில்லை" என பிரேசில் அறிவியல் துறையின் ஆதரவில் இயங்கும் மமிரவா நிறுவனம் (Mamiraua Institute) தெரிவித்துள்ளது. உயர்ந்து வரும் வெப்ப நிலை காரணமாக அமேசான் காடுகளில் உள்ள நீர்மட்டமும் குறைந்து கொண்டே வருகிறது.

பரப்பளவில் கிட்டத்தட்ட ஆஸ்திரேலியாவின் அளவிற்கு பரந்து விரிந்துள்ள இக்காடுகளில் இது போன்ற வானிலை நிகழ்வுகள் நடைபெறுவதால் 1 லட்சம் பேருக்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இயற்கைக்கு எதிரான பல நடவடிக்கைகளில் மனிதர்கள் ஈடுபட்டு வருவதால் இது போன்ற விசித்திரமான பருவநிலை மாற்றங்கள் ஏற்படலாம் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்து வந்தனர். இந்த நிகழ்வு அதனை உறுதிப்படுத்துவதாக உள்ளதாக சமூக வலைதளங்களில் கருத்து நிலவுகிறது.

# கடந்த ஒகஸ்ட் மாதத்தில் அதிகூடிய ஏற்றுமதி வருமானம்



2023 ஆம் ஆண்டில் ஒரு மாதத்தில் ஈட்டிய அதிகூடிய ஏற்றுமதி வருமானம் கடந்த ஒகஸ்ட் மாதத்தில் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 1,119 மில்லியன் டொலர்களாக அது பதிவாகியுள்ளது.

ஆனால் அந்த எண்ணிக்கை கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் ஈட்டிய ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் 8.7% வீழ்ச்சியாகும் என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2023 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் நாட்டின் ஏற்றுமதி வருமானம் 8,010 மில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இது 10.1% வீழ்ச்சியாகும்.

வெளிநாட்டு சந்தையில் குறிப்பாக தைத்த ஆடைகளுக்கான தேவை குறைந்தமையே ஏற்றுமதி வருமானம் குறைவதற்கான பிரதான காரணம் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## நீதிபதி சரவணராஜா இராஜினாமா தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் வெளியிட்ட அறிக்கை



நீதித்துறைக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களால், சர்வதேச உதவிகளை நம்பியுள்ள நாட்டின் எதிர்காலத்துக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படலாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் இராஜினாமா குறித்து அவர் நேற்று (2) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, "மேலாதிக்கச் சிந்தனையில் சில அரசியல்வாதிகள் இன்னும் செயற்படுவதையே நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் மீதான அழுத்தங்கள் புலப்படுத்துகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள இழுபறிகள், வங்குரோத்துக்குச் சென்றுள்ள நிதி நிலைமைகளால் நாட்டின் மீது சர்வதேசத்தின் கவனம் குவிந்துள்ள சூழலிது.

இவ்வாறுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் கடன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் சர்வதேசம் திருப்தியில் இல்லை. பல்வகையான பொறிக்குள் நாடுள்ளபோது அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவதனூடாகவே சர்வதேசத்தின் அபிமானத்தை வெல்ல முடியும்.

ஆணைக்குழுக்களை நிறுவுதல், அரசியலமைப்பில் திருத்தம்செய்தல் என்பவை கண்துடைப்புக்காகவா செய்யப்படுகிறது என்ற சந்தேகங்களைக் கிளறும் வகையிலே சிலரின் செயற்பாடுகள் உள்ளன.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையையும் மீறி பாராளுமன்ற உறுப்பினர் சிலர் தெரிவித்த கருத்துக்கள், நீதித்துறையை பாரபட்சத்துக்குள் புகுத்துவதற்கான முயற்சியா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதிகாரவர்க்கத்துக்குள் அல்லது பெரும்பான்மை விருப்புக்குள் நீதிமன்றங்களையோ அல்லது அரச நிர்வாகத்தையோ கொண்டுவர முயல்வது ஆரோக்கியமாக அமையாது. முல்லைத்தீவு நீதிபதிக்கு நடந்த கதிபோன்று எவருக்கும் நடைபெறக்கூடாது. அரசாங்கம் இதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

நிதி மற்றும் நீதித்துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இல்லாவிடின் பாரிய நெருக்குதல்களுக்கு நாடு உள்ளாவதை தவிர்க்க முடியாது போகும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் தலைவரான குமார் சங்கக்கார



மெரில்போன் கிரிக்கெட் கிளப் (MCC) உலக கிரிக்கெட் குழுவின் புதிய தலைவராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.